### 4. வேறு எழுத்துருத் தொகுதிகளைக் கூட்டாக உருவாக்கல்

3 - 9 அந் தரம் | 30 - 120 மணித்துளிகள்

கருவிகள்:
கோவை

அ) வீரச்செயல் கதை நூலை உருவாக்குதல் போல (பார்க்கவும் மேலே) வேறு தொகுதிகளை உருவாக்கலாம். பொதுவாக, இது முதலில் கருப்பொருள் அல்லது தலைப்பினை உறுதிசெய்துகொண்டு ஒரு தொகுதிக் கோப்புக்கு முன்னேற்பாட்டுடன் செய்யப்படும். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒன்று அல்லது பல எழுத்துருக்களை எழுதி தொகுதிக்குப் பங்களிப்பர். இது வழக்கமான கற்கைகளுக்கு இணையொத்ததாக (தன்னிச்சையான பங்களிப்புக்கான அல்லது வீட்டுவேலை ஒப்படைகளாக) இடம்பெறும்.

அப்படிப்பட்ட தொகுதிகளுக்கான தலைப்புகள்:

- வேடிக்கையான நகையூட்டும் கிளைக்கதைகள்
- பிறந்த நாட்டுக் கதைகள்/வீரச்செயல்கள்
- விலங்குக் கதைகள்
- செய்முறைகள்
- கைவினைச் செயற்பாடுகளுக்கான அறிவுறுத்தல்

# 6 மொழியில் சிறிய கலைச்சுவையுள்ள மற்றும் ஆக்கச் செயற்பாடுகள்

**இலக்கு**

எளிமையான ஆக்கத்திறனுள்ள செயற்பாடுகளூடாக எழுதும் மகிழ்வினைக் கூட்டுதல், கலப்பு வயது அணிகளுடன் இச்செயற்பாடு நன்கு அமையும்.

### 1. ஒருவர் தன்பெயருக்கான எழுத்துப் படங்கள்.

2 - 9 அந் தரம் | 15 மணித்துளிகள்

சிரிப்பு
வடிவம்
மனிதன்
திண்ணை

அ) ஒரு துண்டுத் தாளில் (A3 அல்லது A4 இல் தடிப்பாக இருப்பது விரும்பத்தக்கது) ஒவ்வொரு மாணவனும் அல்லது மாணவியும் தன் முதற் பெயரை (அல்லது முதல் மற்றும் கடைசிப் பெயரை) செங்குத்தாக ஓர் எழுத்தை மற்ற எழுத்துக்குக் கீழிட்டு எழுதுவர். ஒவ்வொரு எழுத்தும் நன்றாக ஒப்பனை செய்யப்பட்டு வண்ணமிடப்படும்.

ஆ) செங்குத்தாக இடப்பட்டுள்ள எழுத்துக்களுள் ஓரெழுத்தினை தொடக்கமாகக் கொண்டு ஓர் சொல் ஆக்கப்படுகிறது. முடியுமாயின் அச்சொல் குறிப்பிட்ட பிள்ளையுடன் தொடர்புற்றதாயிருக்கவேண்டும் (எ.கா. ஒரு பண்பு, அல்லது பெயர், மாணவன்/மாணவி விரும்புகின்ற ஏதாவது ஒன்றைப் புலப்படுத்தல்).

### 2. சொல் ஏணிகள்

2 - 9 அந் தரம் | 20 மணித்துளிகள்

குறிப்பு:
பயன்படுத்தும் மொழியைப் பொறுத்து இந்த பயிற்சி கடினமாயிருக்கலாம். கட்டாயம் முன்கூட்டியே முயற்சிசெய்து பார்க்கவும்

| | | |
|---|---|---|
| வி | டு | வி |
| க | சி | க |
| ட | - | ட |
| க | ற் | க |
| வி | ரை | வி |

அ) ஒவ்வொரு மாணவன்/மாணவி அல்லது இணையர் தாள் (A4) ஒன்றினைப் பெற்று, 4 – 7 வரையான எழுத்துகள் கொண்ட சொல் பற்றி எண்ணுவர். இச்சொல் தாளின் இடது பக்கத்தில் மேலிருந்து கீழாக செங்குத்தாக எழுதப்படும். பின்னர் அதே சொல் வலது பக்க விளிம்பில் எழுதப்படும் ஆனால் கீழிருந்து மேலாக.

ஆ) எழுத்துகளுக்கு இடையேயுள்ள இடைவெளிகளை பயன்படுத்தும் மொழியைப் பொறுத்து தாளின் இரு பக்கங்களிலுமுள்ள தொடக்கமாகவும் முடிவதாகவுமுள்ள எழுத்துகளாலான சொற்களால் நிரப்பவேண்டும்.